Puducherry / Regional / Bulletin / Tamil /18.10Hrs / 24.6.2024 / Script.

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

தேதி : 24.6.2024 - திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

18ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத்தொடர், புதிய உறுப்பினர்களின் பதவி ஏற்புடன், இன்று தொடங்கி உள்ளது.

**முன்னேறிய இந்தியா ஒன்றை** உருவாக்கும் மன உறுதியுடன், புதிய மக்களவையின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

140 கோடி இந்தியர்களின் **வாழ்க்கை மேம்பாட்டிற்கான** கருவியாகவே, தேசிய ஜனநாயக கூட்டணி, சீர்திருத்தங்களைப் பார்ப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

விற்பனையாளர்கள் மற்றும் மாவு ஆலைகளின் **கோதுமைக் கையிருப்பு** மீது, மத்திய அரசு, உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது.

18ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத்தொடர் இன்று தொடங்கி உள்ளது. தற்காலிக சபாநாயகர் திரு. பர்த்ருஹரி மஹதாப் அவை உறுப்பினராக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்ததைத் தொடர்ந்து, புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வரை, அவையின் அலுவல்களை நடத்துவதில் தற்காலிக சபாநாயகருக்கு உதவத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள குழுவின் உறுப்பினர்கள் , பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். பிஜேபி எம்.பி.க்கள் திரு. ராதாமோகன் சிங், திரு. ஃபகன்சிங் குலஸ்தே ஆகியோர் இவ்வாறு பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட போதிலும், காங்கிரஸ் எம்.பி. திரு. கே. சுரேஷ், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு, திரிணாமுல் காங்கிரசைச் சேர்ந்த திரு. சுதீப் பந்தோபாத்யாய் ஆகியோர் தற்காலிக சபாநாயகர் குழுவின் உறுப்பினர்களாக பதவியேற்பதை தவிர்த்துவிட்டனர்.

பின்னர் மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, திரு. நிதின் கட்கரி, திரு. சிவ்ராஜ் சிங் சவுகான், திரு. மனோகர் லால், திரு. பியூஷ் கோயல், திரு. ஜித்தன்ராம் மாஞ்சி, திரு. ராஜீவ் ரஞ்சன், டாக்டர் வீரேந்திர குமார், திரு. கிரண் ரிஜிஜு, திரு. சீராக் பாஸ்வான், திரு. ஜோதிராதித்ய சிந்தியா, திருமதி. அன்னபூர்ணா தேவி மற்றும் பிறர் மக்களவை புதிய உறுப்பினர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

மத்திய அமைச்சர் திரு. எச்.டி. குமாரசாமி, கன்னடத்திலும், திரு. தர்மேந்திர பிரதான், திரு. ஜுயல் ஓராம் ஆகியோர் ஒடியா மொழியிலும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். மற்றும் மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் அசாமி மொழியிலும், மத்திய அமைச்சர்கள் திரு. ராம்மோகன் நாயுடு, திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் தெலுங்கிலும், பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். மத்திய அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ்-விற்கு மராத்தி மொழியிலும், டாக்டர் ஜிதேந்திர சிங்கிற்கு, டோக்ரி மொழியிலும், பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. மத்திய அமைச்சர் திரு. சுரேஷ் கோபி மலையாளத்திலும், மற்றொரு மத்திய அமைச்சர் திரு. சுகண்டா மஜும்தார், வங்க மொழியிலும், பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். மத்திய அமைச்சர் திரு. துர்கா தாஸ் உய்க்கி, சமஸ்கிருத மொழியில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

அமைச்சர்களைத் தொடர்ந்து, அகர வரிசைப்படியான மாநில வாரியாக, அவையின் இதர புதிய உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. இன்றைய தினம், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக உள்ளிட்ட எதிர்கட்சி எம்.பிக்கள், அரசியல் சாசனத்தின் பிரதிகளை கையில் எடுத்துக் கொண்டு, அவைக்கு வந்திருந்தனர்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த விஜயநகரம் தொகுதி, தெலுங்கு தேசம் எம்.பி. திரு. ஏ. காளிசெட்டி, மிதிவண்டியில் நாடாளுமன்றத்திற்கு வந்திருந்தார். வேறு சில எம்.பிக்கள் தத்தம் பிராந்தியத்தின் பாரம்பரிய உடை அணிந்து, நாடாளுமன்றத்திற்கு வந்திருந்தனர். ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள், ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டு. தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

18ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத்தொடர், முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்கும் மன உறுதியுடன் இன்று தொடங்கி இருப்பதாக , பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நாட்டிற்கு சேவை புரியவும், நாட்டு மக்களின் எண்ணங்களை நிறைவேற்றவும், அரசு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று, இன்று காலை நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறினார். அரசை நடத்திச் செல்ல பெரும்பான்மை தேவை என்றாலும், நாட்டை நடத்திச் செல்ல பொதுக்கருத்தே மிக முக்கியம் என்று, திரு. நரேந்திர மோடி கூறினார். விரைவான முடிவுகளை எடுத்து முன்னேறும் அதே வேளை, அரசு, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் என்றும், அரசியல் சாசனத்தின் மாண்பை பராமரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலை பெற்றது முதல், நாடாளுமன்றத்தின் பழைய கட்டிடத்தில் நடைபெற்று வந்த புதிய எம்.பிக்களின் பதவியேற்பு, தற்போது முதல் முறையாக, நாடாளுமன்றத்தின் புதிய கட்டிடத்தில் நடப்பதையும், தொடர்ந்து 3ஆவது முறையாக நாட்டிற்கு சேவை புரியும் வாய்ப்பை, மக்கள், ஓர் அரசுக்கு வழங்கி இருப்பது, விடுதலைக்குப் பின்னர் இதுவே 2ஆவது முறை என்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

நாட்டு மக்கள் எதிர்கட்சிகளிடம் இருந்து நல்ல நடவடிக்கைகளை எதிர் பார்ப்பதாகவும், ஜனநாயகத்தின் கண்ணியத்தை பராமரிப்பதில் மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப எதிர்கட்சிகள் செயல்படுவதாக தாம் நம்புவதாக அவர் கூறினார். நாடாளுமன்ற அலுவல்கள் அடிக்கடி தடைபடுவதை மக்கள் விரும்பவில்லை என்று பிரதமர் கூறினார். பொறுப்பான எதிர்க் கட்சிகள்தான் நாட்டிற்குத் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

***மோடி சீர்திருத்தம் (8)***

140 கோடி இந்தியர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான கருவியாகவே, தேசிய ஜனநாயக கூட்டணி, சீர்திருத்தங்களை பார்ப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். ஜிஎஸ்டி அறிமுகமான பின்னர், வீட்டுத் தேவைகளுக்கான பொருட்களின் விலை மலிவாகி இருப்பதாகவும், இதனால், சாதாரண ஏழை மக்களுக்கு கணிசமான அளவில் பணம் மிச்சமாகி இருப்பதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். மக்களின் வாழ்க்கையில் மாற்றம் கொண்டு வரும் பயணத்தைத் தொடர, அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

*கோதுமை (17)*

உணவு தானியங்களின் பதுக்கலை தடுக்கும் வகையில் மத்திய அரசு, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் மாவு ஆலைகளின் கோதுமை கையிருப்பு மீது, உச்ச வரம்புகளை நிர்ணயித்துள்ளது. மொத்த விற்பனையாளர்கள் அதிகபட்சம் 3 ஆயிரம் டன் வரையிலும், சில்லறை விற்பனையாளர்கள் அதிகபட்சம் 10 டன் வரை மட்டுமே கோதுமை கையிருப்பு வைத்துக் கொள்ளலாம் என்று மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறைச் செயலர் திரு. சஞ்ஜீவ் சோப்ரா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் தேதி வரை, இந்த உச்ச வரம்பு அமலாகும் என்றும் அவர் கூறினார்.

கோதுமையின் சந்தை விலை நிலையாக பராமரிக்கப் படுவதை உறுதிப்படுத்தும் வகையில், சந்தைத் தேவைக்கு ஏற்ப கையிருப்பு வரம்புகள் மறு ஆய்வு செய்யப்படும் என்று உணவுத் துறைச் செயலர் கூறினார். நாட்டில் கோதுமைக்கு பற்றாக்குறை இருப்பதாக ஊடகங்களில் வெளியாகி உள்ள செய்திகளை மறுத்த அவர், சந்தையில் கோதுமையின் விலை நிலையாகவே உள்ளதாகவும், நுகர்வோர் நலனை கருத்தில் கொண்டு, விலை விகிதங்கள் தொடர்ந்து பராமரிக்கப் படும் என்றும் கூறினார்.

*குஜராத் சிபிஐ (9)*

நீட் தேர்வின் போது, குஜராத் மாநிலம் கோத்ராவில் ஒரு தேர்வு மையத்தில் முறைகேடுகள் நடந்ததாக கூறப்படுவது குறித்து விசாரிக்க, சிபிஐ அதிகாரிகள் குழு ஒன்று, இன்று கோத்ரா சென்றுள்ளது. கேள்விகளுக்கு விடையளிக்க சுமார் 30 மாணவர்களுக்கு சிலர் உதவியதாக கூறப்படும் வழக்கில், போலிசார் இதுவரை, 5 பேரை கைது செய்துள்ளனர். குற்றம் சாட்டப் பட்டவர்களின் ஜாமீன் மனுவை பஞ்ச் மஹால் மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஏற்கனவே நிராகரித்துள்ளது.

இதற்கிடையே நீட் கேள்வித்தாள் கசிந்து வெளியான விவகாரம் தொடர்பாக மகாராஷ்டிர மாநிலம் லட்டூரிலும், 2 பள்ளி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

*காங்கிரஸ் (8)*

பணவீக்கம், நீட் தேர்வு, மேற்குவங்க ரயில் விபத்து போன்ற பிரச்சனைகளில் மத்திய அரசு மவுனம் காப்பதாக, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டி உள்ளார். இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார். அரசியல் சாசனத்தை மத்திய அரசு பலவீனப் படுத்துவதை கண்டித்தே எதிர்கட்சி எம்.பிக்கள், இன்று அரசியல் சாசன பிரதிநிதிகளை கையிலேந்திய வண்ணம், நாடாளுமன்றத்திற்கு வந்திருப்பதாக மூத்த காங்கிரஸ் எம்.பி. திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

***நட்டா கடிதம் (9)***

தமிழக விஷச்சாராய சம்பவம் குறித்து மத்திய அமைச்சரும், பிஜேபி தேசிய தலைவருமான திரு. ஜே.பி நட்டா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவுக்கு கடிதம் எழுதி உள்ளார். இப்பிரச்சனையில் காங்கிரஸ் மவுனம் காப்பது ஏன் என்று அவர் வினவி உள்ளார். பிரச்சனை குறித்து சிபிஐ விசாரணைக்கு பரிந்துரைக்க காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றுள்ள தமிழக ஆளும் கட்சியான திமுகவை, காங்கிரஸ் வற்புறுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளார். தமிழக அமைச்சரவையில் இருந்து அமைச்சர் திரு. முத்துசாமியை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் திரு. ஜே.பி. நட்டா கோரியுள்ளார்.

*கெஜ்ரிவால் (9)*

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை பற்றிய வழக்கில், விசாரணை நீதிமன்றத்தால், முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு வழங்கப்பட்ட ஜாமீன் அனுமதியை நிறுத்தி வைத்து, உயர்நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவை ஆட்சேபித்து, திரு. கெஜ்ரிவால் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணைகளை, உச்சநீதிமன்றம் வரும் புதன் கிழமைக்கு ஒத்தி வைத்துள்ளது. ஜாமீன் அனுமதிக்கு தடை கோரி அமலாக்கத் துறையினர் தாக்கல் செய்த மனு மீதான உயர்நீதிமன்றத்தின் இறுதி முடிவு, அன்றைய தினத்திற்குள் எதிர் பார்க்கப்படுவதாக, உச்சநீதிமன்ற அமர்வு இன்று தனது உத்தரவில் கூறியது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். மீனவர் பிரச்சனைக்குத் தீர்வு காண ஏற்கனவே அமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழுவை புதுப்பிக்கவும், இலங்கை அரசிடம் மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கிடையே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 20 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்களையும், விசைப் படகுகளையும் விடுவிக்க, மத்திய – மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவர்கள் வலியுறுத்தினர்.

*தாகூர் கல்லூரி (8)*

புதுச்சேரி தாகூர் அரசு கலை - அறிவியல் கல்லூரிக்கு தேசிய தர மதிப்பீட்டு மற்றும் சான்றளிப்பு சபையின் NAAC – A தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சான்றிதழை, கல்வித்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயத்திடம் இருந்து, கல்லூரி முதல்வர் திரு. சசிகாந்த தாஸ் பெற்றுக் கொண்டார். இந்தியாவில் மிகச் சில அரசு கல்லூரிகளுக்கு மட்டுமே, NAAC – A தரச்சான்று வழங்கப்பட்டு உள்ளதும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், இச்சான்றிதழ் பெற்ற ஒரே கல்லூரியாக, தாகூர் அரசு கலை – அறிவியில் கல்லூரி திகழ்வதும் குறிப்பிடத் தக்கது.

*வானிலை (9)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும், கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி மற்றும் நெல்லை மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் வரும் 26ஆம் தேதி வரை ஒருசில இடங்களிலும், அதன்பின்னர் 30ஆம் தேதி வரை, ஓரிரு இடங்களிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் பந்தலூரில் 9 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

***கிரிக்கெட் (6)***

ஆடவர் 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்திய நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு, செயின்ட் லூசியாவில் நடைபெறும் சூப்பர்-8 போட்டியில், இந்தியா – ஆஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன. ஆண்டிகுவாவில் இன்று காலை நடைபெற்ற சூப்பர்-8 போட்டியில், தென்னாப்பிரிக்க அணி, வெஸ்ட்இண்டிஸ் அணியைத் தோற்கடித்து, அரையிறுதி நிலைக்குத் தகுதி பெற்றது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

18ஆவது மக்களவையின் **முதலாவது கூட்டத்தொடர்,** புதிய உறுப்பினர்களின் பதவி ஏற்புடன், இன்று தொடங்கி உள்ளது.

**முன்னேறிய இந்தியா** ஒன்றை உருவாக்கும் மன உறுதியுடன், புதிய மக்களவையின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கி இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

140 கோடி இந்தியர்களின் **வாழ்க்கை மேம்பாட்டிற்கான** கருவியாகவே, தேசிய ஜனநாயக கூட்டணி, *சீர்திருத்தங்களைப்* பார்ப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

விற்பனையாளர்கள் மற்றும் மாவு ஆலைகளின் **கோதுமைக் கையிருப்பு** மீது, மத்திய அரசு, உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது.